**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் திங்கட்கிழமை**

**இ.ம.எண். 6/2024**

**இன்**

**அ.வ.எண்.466/2021**

1. முத்துகுமார்

2. பழனிச்சாமி

3. வஜ்ரவேல் --- மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. பழனிக்குமார் --- எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது 15.03.2024 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் M. ஹரிஹரன் மற்றும் B. தமிழன்பன் ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S. தினேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## பொது உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்ட ஆவணங்களை ஏற்றுக்கொள்ளவேண்டி சி.பி.சி. கட்டளை 7 ரூல் 1(A)(3) மற்றும் பிரிவு 151-ன்படியும் மனுதாரர்களால் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:-**

மனுதாரார்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் தரப்பு சாட்சியமானது முடிக்கப்பட்ட பின்னர் பிரதிவாதி தரப்பில் சாட்சி விசாரிக்கப்பட்டு வழக்கானது குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. வழக்கு சொத்து சம்பந்தமான 09.06.1945 ஆம் தேதியிட்ட அமராவதியம்மாள் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் 11.02.1966 ஆம் தேதியிட்ட அமராவதியம்மாளிடமிருந்து அங்கம்மாள் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்கள் தற்போது மனுதாரர்களுக்கு

கிடைத்துள்ளது. மேற்படி ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பு வாதத்தை நிரூபணம் செய்ய மிகவும் முக்கியமான ஆவணங்களாகும். எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள உத்தரவிடவேண்டும்.

3...**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு** :-

மனுதாரர்களின் மனு பொய்யானது. நிலைநிற்கத்தக்கதல்ல. வாதிகள் இந்த வழக்கை கடந்த 2021 ஆம் ஆண்டு தாக்கல் செய்து இரண்டு ஆண்டுகள் கழித்தே வழக்கானது விசாரணைக்கு வந்துள்ளது. வாதிகள் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்ட பின்னர் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்பு இவ்வாறான மனு தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. வாதிகள் தரப்பு விசாரணையானது முடிக்கப்பட்ட பின்னர் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்து ஒரு தரப்பு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்ட பின்பு மீண்டும் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்து அதனை வைத்து வழக்கை மறுதிறப்பு செய்வது வழக்கின் போக்கை மாற்றி அமைத்துவிடும். ஏற்கனவே வாதிகளுக்கு பல சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டுவிட்டது. எனவே மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**6. தீர்வு**:-

6.1. மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்ததில், வாதிகள் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டுவிட்ட பின்னர் இவ்வாறான மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. வழக்கு சொத்து சம்பந்தமான 09.06.1945 ஆம் தேதியிட்ட அமராவதியம்மாள் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் மற்றும் 11.02.1966 ஆம் தேதியிட்ட அமராவதியம்மாளிடமிருந்து அங்கம்மாள் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சான்றிட்ட நகல்கள் தற்போது மனுதாரர்களுக்கு கிடைத்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை சான்றாவணங்களாகக் குறியீடு செய்ய வேண்டுமென்று தெரிவித்து மனுவை அனுமதிக்கக்கோரி வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிகள் தரப்பு சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுவிட்ட பின்னர் கூடுதல் ஆவணங்களைத் தாக்கல் செய்வது வழக்கின் போக்கை மாற்றும் என்று சொல்லி ஆட்சேபணைத் தெரிவிக்கப்பட்டது.

6.3. எவ்வாறிருப்பினும், வாதிகள் முன்னுரிமையாளர்களின் கிரைய ஆவணத்தைத் தாக்கல் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டுள்ள நிலையில் அவர்களுக்கு அவர்கள் தரப்பு ஆவணங்களைக் குறியீடு செய்ய வாய்ப்பு வழங்கவேண்டுமென்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனுவை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. முடிவாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.04.03 18:10:10 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2024.04.03 18:10:15 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**